# மாவீரர் தினம்

www.tamilarangam.net




தமிழீழ தேசிய ஆன்மாவின் பிரதிநிதிகளாய் மரணத்தோடு போராடி மரணத்தை வென்றவர்களின் தினம்!

தமிழீழ மக்களின் வாழ்வாய், கவசமாய், மூச்சாய், பேச்சாய், போர்க்குணங் களின் ஆக்ரோஷ வெளிப்பாடாய் ஆர்ப்பரித்து வீர அறுவடையின் விளைநிலமாய் ஆனவரின் தினம்!

எமது மக்களின் இதயங்களை இயங்கச் செய்ய தமது இதயங்களின் அசைவை நிறுத்திக் கொண்டவர்கள். எமது மக்களின் விழிகள் விழித்துக் கொள்ள தமது விழிகளை மூடிக்கொண்டவர்கள். எமது மக்களின் வாழ்விற்காக, எமது சந்ததியினரின் எதிர்கால வாழ்விற்காக தமது வாழ்வை சந்தோஷத் தோடு முடித்துக்கொண்டவர்கள்.

இன்று அந்த உன்னதமான, உயரிய மாமனிதர்களின் தினம்.

---

ஒரு போராளியின் மரணம் என்பது அவனையோ அன்றி அவளையோ பெற்று பேணிவளர்த்த தாயுடனோ அன்றி அன்பூட்டி வளர்த்த தந்தையு டனோ அன்றி இதயப்பிணைப்புடன் வாழ்ந்த அவர்களது உடன்பிறப்புக் களுடனோ சம்பந்தப்பட்ட தனிநபர் சோக நிகழ்வு அல்ல.

அது மிக மிக விசாலமானது. அவர்கள் வாழ்ந்த தேசத்தோடு சம்பந்தப்பட் டது. எந்த மக்களுக்காக அவர்கள் மரணத்தை ஏற்றுக்கொண்டார்களோ அந்த மக்கள் வெள்ளத்தோடு சம்பந்தப்பட்டது. அவர்கள் பிரதிநிதித்துவப் படுத்திய மக்களின் உணர்வு பூர்வமான உள்ளத்துடிப்புடன் சம்பந்தப்பட் டது.

---

பிரான்ஸ் வாழ் தமிழீழமக்களே!

எமது மாவீரர்களின் இன்றைய புனித தினத்திலே எமக்குண்டான வரலாற் றுக்கடமையை உணர்ந்துகொள்வோம்.

அவர்கள் விட்டுச் சென்ற பாதையில் சுதந்திரப் பதாகையை மேலும் உயர்த்தி சுதந்திர விடியலுக்கான பயணத்தைத் தொடர உறுதி பூணுவோம்.

அந்த மாமனிதர்களின் தியாகங்களை, உயரிய அர்ப்பணிப்புக்களை கௌரவிக்க உணர்வுள்ள அனைத்து தமிழீழ மக்களையும் உரிமையுடன் அழைக்கின்றோம்.

காலம் : 30.11.1990 வெள்ளிக்கிழமை

நேரம் : மாலை 5.30 மணி

இடம் : 9bis Avenue d'léna
75016 paris.
M : léna

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்